UNDERGRADUATE LIBRARY
JUL 24 '68


# The MORNING STAR
உதய தாரகை

Registered as a Newspaper (Established 1841) Published Every Friday

Vol. 128. JAFFNA, FRIDAY, 19TH JULY, 1968. No. 27.

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



## Rates

*Subscriptions :*

Inland Rs. 15-00 per year

Foreign Rs. 20-00 „ „

Single copy 40 cts. (including postage)

*Advertisement :*

On application

*In Memoriam :*

Rs. 12-50 per insertion (within 4 inches)

*Order Nisi :*

Rs. 15-00 for two insertions (within 6 inches)



## Notice

*Please Address :*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to : The Editor, The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to : The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy

(4) All Business correspondence *re* Advertisements and Subscriptions and all remittances to :

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


## TO ALL SUBSCRIBERS

This is to remind you again to pay up all arrears of subscriptions due till the end of 1967. The 1968 subscription of Rs. 15/- is now due. Please respond as early as possible.

**Manager**

25 — 28

## CONVENTION

The Jaffna Christian Union has arranged to hold a Convention at the Fort Church, Jaffna, from the 13th to the 15th of August. The speakers at these meetings will be: the Rev. C. Arangaden, Translations Secretary of the Bible Society of India, and the Rev. Sam D. Horsh-ington, of Hatton.

The Christian Union celebrates its sixtieth anniversary on the 15th of August.

## THANKSGIVING SERVICE

A Service of Thanksgiving in memory of the late Mr. A. F. Rajaratnam was held at St. James' Church, Nallur, on the 9th of July. The celebrant was the Rev. R. H. R. Hoole assisted by the Rev. W. R. Coomarasamy. Mr. C. C. Rajah, retired Principal, Mann's School, Uduvil, and a friend of the late Mr. Rajaratnam, retired Registrar, Supreme Court, Ipoh, spoke on that occasion. He paid a tribute to the deceased. Among his many sterling qualities, compassion and helping the needy and the poor were outstanding. His advice was sought by all and sundry who were in difficulty and he gave it ungrudgingly. He was a much respected Tamil who brought honour and credit to his country in the whole of Malaya.

As Court Interpreter, he was conversant in three languages in addition to Tamil and English — Malay, Malayalam and Telugu. He discharged his duties conscientiously and efficiently and earned the esteem and love of the whole community in Ipoh. He led a good Christian life and leaves behind a good Christian home — his wife, five daughters and two sons to follow his example and footsteps.

## SACERDOTAL SILVER JUBILEE

The Revds. A. J. C. Selvaratnam and Celestine Fernando celebrated the Silver Jubilee of their ordination at the Ladies' College Chapel, Colombo, on the 29th June. The preacher on that occasion was the Bishop's Commissary, the Ven. Cyril Abeynaike, who referred to their ordination on St. John the Baptist's Nativity Anniversary and the important positions they held today in the life of the Church, the former being Warden of St. Thomas' College, Mount Lavinia, and the latter Secretary of the Bible Society in Ceylon; and of the work they had done in various spheres of the Church earlier and of their outstanding ability; their devotion to their work which had led and prepared them to such high positions in the Lord's service, and wished them God's blessing and many more years of service.

## THE WOMEN'S CENTRE

Dr. E. M. Thillayampalam has arrived from India. At present she is with her niece, Mrs. Lewis, in "Bethel", Uduvil. Work is proceeding on Brown House, at the Women's Centre, to make it ready for her occupancy, as the new manager.

Plans are also under way to repair the roofs of "Packiavasam", and renovate the kitchen.

## WEDDING

A pretty wedding took place at St. Mary's Church, Kuala Lumpur, on Saturday, the 8th inst., at 4 p.m. when Mr. Ernest Selvandiran, of the Malayan Co-operative Insurance Society and son of Mr. M. W. Navaratnam, A. M. N., J. P., led to the altar Miss Augusta Sironmani, of the staff of the Ampang Girls' School and the eldest daughter of Mr. S. C. Sinnadurai. The marriage was solemnized by Canon Samuel of the St. Mary's Church, assisted by the Rev. (Dr.) T. Thangaraj of the Methodist Church. After the ceremony the bride's parents held a largely attened reception at the Eastern Hotel. The toast of the bride and bridegroom was proposed by Mr. V. G. Thalayasingam, Principal, Methodist Afternoon School, supported by Miss Ada E. Weiman.

The bride is a graduate of the University of Madras and the University of Malaya.

## PERSONAL

Mr. Valentine Daniel, former active member of the student body of the Jaffna College School Department, has been accepted on scholarship as a second-year student at Amherst College, in Amherst, Western Massachusetts. He will enter in September, 1968.

His first college year was spent at non-residential Northern Essex Community College, in Haverhill, Massachusetts, where he was sponsored by the United Church of Christ in Bradford. It was in Bradford the American "foreign mission" movement started.

Amherst College is proud that the Japanese founder of the Doshisha University in Kyoto was an early graduate. Doshisha is the greatest of the universities related to the Protestant community in Japan — 25,000 students. Today an associate professor of Amherst College, Mr. Otis Cary, is on leave to Doshisha University where he teaches American History and is Director of Amherst House, a dormitory for twenty highly selected students.

President Eisenhower's only grandson is a student at Amherst. It's a small men's College, established in 1821, in a one-time rural setting. A new neighbour is the giant (state) University of Massachusetts.

## OBITUARY

### *The Rev. D. P. Eliatamby*

The death occurred on the morning of last Tuesday, the 16th inst., at the Green Memorial Hospital Manipay, of the Rev Daniel Poor Eliatamby, retired Worker of the Jaffna Diocesan Council of the Church of South India. He had been ill for some weeks but was improving in his health when death came suddenly. He was over 75 years of age, having been born in October, 1892. The youngest son of the late Rev. S. Eliatamby, the deceased had his education first at Jaffna College and then at Bishop's College, Calcutta. Finishing his education, he worked on the staff of the Calcutta Y. M. C. A. After the World War I he was in Mesapotamia doing relief work under the Y. M. C. A. For a period he had his training at the United Theological College, Bangalore. He joined the then Jaffna Council of the South India United Church in 1930, his first church being Chankanai. He was ordained in June 1945 and during the 38 years of his service in the Diocese he worked in several churches like Uduvil, Tellippalai, Uduppiddy, Araly, Pandaterrappu, Manipay and Navaly. Though he had retired from active service ten years ago, he worked till May of this year when he finally retired. The last church he was in charge of was Anaicoddai.

The funeral took place on the morning of the next day at Manipay. The Bishop of the Diocese, the Rt. Rev. Dr. S. Kulandran, conducted the service at the Manipay Church, assisted by the Rev. G. M. Kanagaratnam and the Rev. D. P. Niles. The Rev. (Sevak) Sam. Alfred sang a thevaram. In his sermon, based on the 1st verse of the 4th chapter of the First Epistle of Paul to the Corinthians: "This is how one should regard us, as servants and stewards of the mysteries of God", the Bishop stressed that the ministers of the Church, who had received their responsibility from the Lord, should be faithful to Him and remember that they were called to render an account of their stewardship to Him. Others there might who in their responsible positions, as under Government, had to render an account to the authorities for money or estate or some other tasks assigned to them. But the ministers had responsibility for the Gospel entrusted to them. They should remember that they are the guardians of the souls of men. Another difference between ministers and other officers is this: while the latter are called upon to work for some years, the ministers' calling is for life. The ministers cannot be expected to be rewarded by the Lord according to their merit, but out of His grace. It is their effort which will merit recognition. The Bishop said that there could not be any doubt but that the Rev. Mr. Eliatamby had put in his best efforts in his work as a pastor. He was a successful steward. He regarded the work entrusted to him as his own, and not from the point of view of a hireling. He lived for his work and chose to continue in service till his death. He was able to do so because he regarded himself as a fellow-worker with God. In his own personal life he took whatever troubles or misfortunes that came to him lightly. He lived and worked in accordance with the great tradition set by his father, the late Rev. S. Eliatamby, who was undoubtedly one of the greatest leaders of our Church.

Mr. Lyman S. Kulathungam paid a tribute to the life and work of the Rev. Mr. Eliatamby. This tribute will appear in our next issue.

The service came to an end with the pronouncement of the benediction by the Bishop. The remains were then removed for interment to the cemetery of the Tellipalai Church, where the committal rites were performed by the Rev. S. T. Aseervatham assisted by the Rev. (Sevak) Sam Alfred.

The deceased leaves behind his only daughter Shanti and her husband, Mr. Rajanayagam, of the Fisheries Department and a host of friends and relatives who will miss him. His brothers, Messrs. Samuel and John Eliatamby, and his sisters - Mrs. Danforth, Mrs. Hunt, Mrs. Arianayagam, Mrs. E. P. Rajah, and Miss Nallammah Eliatamby - all predeceased him.

### *Mr. W. P. A. Cooke*

As we go to Press, we hear of the death that occurred two days back in Colombo of Mr. W. P. A. Cooke, retired Divisional Agricultural Officer. A fuller account of his obituary will appear in our issue next week.

## SINGAPORE CONGRESS WILL TACKLE UNIQUE ASIAN PROBLEMS

How to relate the Christian message to the unique social situation now facing the countries of Asia will be one of the eight aims of the forthcoming Asia-South Pacific Congress on Evangelism.

In a "Statement of Purpose" released in Singapore recently, the Congress Executive Committee described some of these social situations as "the growing influence of Asia's youth, rapid urbanization, poverty and economic needs, and the primary role of the family". Also mentioned were "an exploding population" and "the diverse cultures of Asia".

The Congress, which will be held November 5-13, 1968, in the 1,000-seat *Dewan Persidangan Singapura* (Singapore Conference Hall), will attract almost that many Christian leaders from some 24 countries in Asia and South Pacific.

In its eight-point statement, the committee declared its intention "to discover ways of implementing the proposals of the 1966 World Congress on Evangelism in this area of the world". The Singapore meeting is the first official regional conference to be called by Dr. Billy Graham, the American evangelist who was honorary Chairman of the World Congress held in Berlin, Germany.

Stressing that "while we cannot make a new purpose in our regional congress", the Rt. Rev. A. Jack Dain of Autralia said, "we need to relate it to the Asian setting". He described the situation in Asia as an area of "exploding population and rapid social change".

"This situation," he said, "calls for a discovery of ways to make the Berlin purpose relevant to our part of the world."

Emphasis will be placed on specialized methods of evangelism designed to overcome "obstacles to evangelism inherent in the diverse cultures of Asia," the purpose states.

High on its eight-point list the committee called for definition of Biblical evangelism. Bishop Chandu Ray of Pakistan, Vice-Chairman of the committee, pointed out that any such definition must underscore personal conversion and subsequent involvement in the total life of the Church.

The Congress, according to the statement, should "evaluate existing programmes and policies in the light of contemporary conditions, and explore ways of vitalizing the programmes and up-dating the policies".

O

### *Letter to the Editor*

## INVOLVEMENT NECESSARY

Dear Sir,

In view of what the Rev. D. J. Ambalavanar writing from Geneva mentions in a letter to me, which I quote below, would you consider publishing the letter I wrote to the Rev. Harvey Perkins, a Secretary of the E. A. C. C. who was in Colombo last month.

Rev. Ambalavanar writes: "I have noticed a healthy climate among the young in Europe that is impatient with can and hypocrisy and would like some things done about the things the Churches have been speaking about. Nobody says, 'We hope Uppsala will say something' but rather the demands is, 'Uppsala must do something'. Well, let us wait and see." (Words underlined by me — A. C.)

Now this is what I wrote to the Rev. Perkins:

'Dear Rev. Perkins,

The General Secretary of the N. C. C. of Ceylon has very kindly invited me to a meeting on the 11th at which you are to lead a discussion on: "Does the Ecumenical Movement really help the Churches?" I am not attending the meeting, as to my limited thinking there is no room for a discussion. The answer simply is a loud "No". In fact, I would go further and hazard the statement that the Ecumenical Movement as at present is a positive threat to the well-being of the Churches.

You are bound to ask why I will not come to the meeting and state all these. Two reasons:

First, you as the accredited representative of the Movement are bound to defend the Movement despite the openness of the wording of the question. When one is forced to defending a position, one comes to really believe in the position taken, and this would be positively be bad for you.

Secondly, during the last one and a half years I have been invited to two or three such meetings conducted by visiting leaders. The attendance has always been poor and limited chiefly to a few retired like myself, glad to spend an evening with a 'holy' purpose. The N. C. C. leaders are not there. What we say on such occasions does not matter. The leaders wield power very effectively in their councils and so why bother to come even if it be an opportunity to get a peep into the thinking of the common man.

To my mind, the visitors and those at the top rungs of the N. C. C. are like people in cable cars moving from peak to peak. The conferences they attend in the different parts of the world are definitely mountain top experiences as will be the coming W. C. C. meeting at Uppsala. The journey in the cable cars is always exhilarating as the conversation is ever of a high order.

Meanwhile, the crowds are far below. They have hardly heard anything of this cable car conversation or the mountain top experiences and the thinking. They, the crowds, go on plodding their weary way, deep in their loneliness, anxiety and puzzle as to where it all leads up to.

Let me give an example. The recent Vatican II has sent ripples all round the world and here in Ceylon at the moment a National Synod is meeting after two years of planning. There have been several W. C. C. and E. A. C. C. meetings and what has been the real effect of these? It would be absurd to say, none. Who can judge in these matters? I for one feel that as a result of these meetings there is a solid mass of valuable thinking which has to be translated into action and without negativating the good motives of the original thinkers.

Another example would help. For many years the W. C. C. has talked about the laity, has its Department of Laity, and people like Dr. Kraemer and Dr. Miss Kathleen Bliss have written books. And yet, and yet, when recently the laity moved to call the laity to their responsibilities, the whole effort was knocked out by the hierarchy. Need I say more!!

One other matter. The notice says that you have special responsibilities for N. C. C. Relations. What this exactly means I do not know. But you will be interested to know that more than one head of Church has mentioned to me in words somewhat as follows: "I say, if it is your intention to see to the abolition of the N. C. C., I am with you". Then many will grant that the thinking within the N. C. C. is communal. Where do you stand in regard to all this?'

You will note that I am with-holding my name from publication. I do so because I am certain that there will be those who disagree with what I have written to Rev. Parkins. My friends among these should have the freedom to attack what I have written if they feel so. Mention of my name may tend to silence them out of their affection for me.

I felt this after the pronouncement of the Rev. Dr. James Mather and the comment by your correspondent. Many of us regard Dr. Mather with great respect. He is truly a senior among us today. But when he says something with which we disagree we are placed in an awkward position. Hence your correspondent, without disrespect as mentioned by you later, made his observations. If he had mentioned his name, then it would have become a street fight.

En passant, there are other aspects to the Rev. Dr. Mather's statement. It must be remembered that, during his days before retirement, he was a great preacher, an efficient administrator and, more than these, a loving and faithful pastor of his flock. That his contribution in these ways was of a high order will be granted by many. At that time he had no political contribution to make. That does not detract from him any of his greatness— "and he gave some apostles, and some prophets etc."

But if he now wishes to make a political contribution as well, he must be ready for the consequences. Christianity has held "that there is no other way". Similarly, it is axiomatic that those who will be heard in political circles as well are those who have had costly involvement. The costly part has ranged from physical pain to bearing simple abuse. All great leaders have been through that way of actual suffering. There is no other way. Others could shout and have a sense of self-importance and may even be applauded, but they are never heard in the real sense.

This kind of involvement is late for people like myself who are old and have spent our lives in other spheres. We have only two choices: we could elucidate a subject if we have the necessary scholarship or we could send our suggestions, worded as strongly as we like, to the politicians themselves. If the Rev. Dr. Mather had written direct to the F. P., we congratulate him. But to make public suggestions causing embarrassment to a political party will naturally be resented by them, specially when they see that there is no involvement from, and no cost to, the one who says them. The D. C. proposal did not suffer from enlightened opinion. In fact, all enlightened opinion was in its favour. The rabble were made to shout against it. Could Pilate have been made to postpone judgment?

I am sorry to come to this matter having started somewhere else. But in the present context in which we Tamils are placed I feel this is an important matter. Many, and among them the retired like myself, are ready with their obiter dicta but hardly able and willing to pay the price.

What the Tamil community needs now, as the Rev. Ambalavanar says, is for those who will do and, may I add, suffer. The American situation is thorny, but it is also producing its martyrs, known and unknown.

A CHURCHMAN

Colombo.


## USE THE SCRIPTURES FOR SHARING THE GOSPEL IN YOUR PARISH

* Open a Scripture Stall,
* Begin a Scripture Team,
* Start a Prayer and Bible Study Group,
* See that every Christian Home has and uses a Bible,
* Ask all who are not Christians to read the New Testament,
* Show Films and Film-strips on the story of the Bible — its history, production and use;
* Hold exhibitions of scripture material and,
* Preach on the relevance of the Scriptures for personal and national life.

*In all these you will find*

RESOURCES FOR EVANGELISM

CONSULT FOR THESE RESOURCES

THE CEYLON BIBLE SOCIETY,
293, Galle Road, Colombo - 3.

22 —



## FLOWERS

FOR

ALL OCCASIONS

*Phone or write :*

**Lane & Company**

P. O. Box 19

NUWARA ELIYA.

*Grams:* "LANES" — *Phone:* 376


## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

*Testamentary Jurisdiction.*
*No. 2229.*

In the matter of the Last Will and Testament of the late Rajasenan David Lewis of Uduvil.

Deceased.

Mary Gnanam widow of Rajasenan David Lewis of do.

Petitioner,

Vs.

Minor 1. Lewis Evengeline Thangaratnam.

„ 2. Lewis Prema Rohini Edith.

„ 3. Lewis Thillairajah Johanathan

„ 4. Lewis Thillainathan Peter.

5. Paul Chandrasenan Lewis of 106/3., Horton Place. Colombo.

Respondents.

This matter coming on for disposal before R. Paramaguru, Esq. Additional District Judge, Jaffna, on the 9th day of April, 1968, in the presence of Mr. K. Senathirajah Proctor on the part of the petitioner and the petition and affidavit of the petitioner and of the witnesses and notary to the Last Will having been read.

It is ordered that the abovenamed 5th respondent be appointed guardian-ad-litem over the minors the abovenamed 1st to 4th respondents and that the Last Will and Testament of the abovenamed deceased dated 24th December, 1967 and attested by K. Senathirajah Notary Public under No. 7678 be declared proved and probate thereof issued to the petitioner by the Executrix named in the said Will, unless the abovenamed 5th respondent or any others interested shall appear before this Court on or before the 26th day of July 1968 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

It is further ordered that the abovenamed minors the 1st to 4th respondents should be produced on the said 26th July, 1968.

This 9th day of April, 1968.

Sgd. I. M. Ismail,
District Judge.

Drawn by
K. Senathirajah,
Proctor for Petitioner.

26 & 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 | 19 — 7 — 1968 | இதழ் 27

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."


## விசேட திகதிகள்

**யூலை 24.**

உடுப்பிட்டியில் தெ. இ. ச. ஊழியர் சங்கமும், ஊழியர் மனைவியர் சங்கமும்.

**ஓகஸ்ட் 13, 14, 15.**

கோட்டைத் தேவாலயத்தில் எழுப்புதற் கூட்டங்கள்.

## மறுமைப் பிரவேசம்

மறைத்திரு. டானியேல் பூர் இளையதம்பி

கடந்த 38 ஆண்டுகளாய் தெ. இ. ச. ஊழியனாயிருந்து கடந்த மாசம் ஓய்வுபெற்றவரும், காலஞ்சென்ற திருமதி மேரி அற்புதம் இளையதம்பியின் அருமைக் கணவரும், திருமதி ஷாந்தி இராசநாயகத்தின் தந்தையுமான மறைத்திரு. D. P. இளையதம்பி அவர்கள் கடந்த செவ்வாய்க் கிழமை (16-7-68) காலை இருதய நோயால் மானிப்பாய் வைத்திய சாலையில் மறுமைக்குள் பிரவேசித்தனர்.

மறுநாள் காலை 8 மணிக்கு மானிப்பாய்த் தேவாலயத்தில் அத்தியட்சர் கலாநிதி குலேந்திரன் அவர்களால், மறைத்திருவாளர்கள் G. M. கனகரத்தினம் W. D. லைல்ஸ் ஆகியோரின் உதவியுடன் சேமாராதனை நடத்தப்பட்டது. அத்தியட்சர் அவர்கள் 1 கொரி. 4 : 1 இல் அருளுரை வழங்கிய போது, "உலகில் மனிதருக்குப் பலவித உத்தரவாதங்களுண்டு. அவற்றிற்கெல்லாம் தம் அதிகாரிகளாகிய மனிதருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்கள் குறிப்பிட்ட நேரத்துக்கு மாத்திரம் கடமைபுரிபவர்கள். ஆனால் தேவனுடைய ஊழியக்காரர் சுவிசேஷம் கூறும் உத்தரவாதத்தின் கணக்கை, சகலத்தையும் படைத்துப் பராமரிக்கும் கடவுளுக்குக் கொடுக்க வேண்டியவர்கள்; எப்போதும் கடமை புரிபவர்கள். கடவுளோ தகுதியின் படியல்ல, கிருபையாகக் கணக்கேற்பவர். தேவ ஊழியனுக்கு எசமானுகிய கடவுள் கூட இருந்து வேலையை இலகுவாக்குபவர். மறைத்திரு இளையதம்பி தம் உத்தரவாதத்தை நிறைவேற்றினர். தம் பிரச்சனைகளை இலகுவாக்கினர், தன்னலமிழுடையராய் விளங்கினர். இவரது தந்தை செல்வாக்குள்ள சிறந்த ஊழியனாய் விளங்கினர். அவரது பரம்பரையில் நெடுங்காலம் அத்தியட்சாதீன ஊழியனானர்" எனக் குறிப்பிட்டனர்.

திரு. L. S. குலத்துங்கம் அவர்கள் பாராட்டுரை வழங்கிய போது, பிதாவின் செல்வாக்கும், கற்ற கல்லூரிகளின் செல்வாக்கும், இவரை நல்லூழியனுக்கிச் சபையாருடன் கலந்துறவாடி இன்ப துன்பங்களில் பங்குபற்றி, பலரின் நட்பைப் பெற்ற நல்லூழியனாய் விளங்க வைத்தன என்றார்.

தெல்லிப்பழைச் சேமக்காலையில் மறைதிரு. S. T. ஆசீர்வாதம் அவர்களால் மறைத்திரு. சாம் அல்விறெட்டினுதவியுடன் நல்லடக்கஞ் செய்யப்பட்டார்.

தயருறும் மகள், மருமகன், பேரப் பிள்ளைகள் ஏராளமான சுற்றமித்திரருக்குத் தேவ தேற்றரவு கிட்டுவதாக.

## எழுப்புதற் கூட்டங்கள்

ஆண்டுதோறும் யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய இயக்கத்தினுதரவில் யாழ்ப்பாணக் கோட்டைத் தேவாலயத்தில் நடைபெறும் எழுப்புதற் கூட்டங்கள் கடந்த சில ஆண்டுகளாய் நடைபெறுகிருந்தன. எனினும் இவ்வாண்டு ஆகஸ்ட் மாசம் 13, 14, 15 ஆம் திகதிகளில் அவை நடைபெற இருக்கின்றன. கடைசி நாள் நிகழ்ச்சி யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய இயக்கத்தின் 60 ஆம் ஆண்டு விழாவாக நடைபெற வருகிறது. இந்திய வேதாகம சங்க வேத மொழி பெயர்ப்புச் செயலாளன் திரு. கிறிஸ்ரி அரங்காடன் அவர்களும், ஆங்கில சபைக்குரு மறைத்திரு. சாம் ஹோஷிக்ரன் அவர்களும் விசேட பேச்சாளராயிருப்பர். விரிவான விபரங்கள் விரைவில் வரவிருக்கின்றன.

## தமிழ்ப் பிரதேசங்களில் அபிவிருத்தித்திட்ட யோசனை

இலங்கையின் தேசிய நலனைக் கருத்திற்கொண்டு ஐக்கியமாக வாழவேண்டும் என்பதற்காக இரண்டு வெவ்வேறு கொள்கைகளையுடைய இரண்டு அரசியற் கட்சிகளுடன் சேர்ந்திருந்தும் தமிழர்கள் இன்றுவரை ஏமாற்றப்பட்டே வந்திருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவிக்கும் தீர்மானம் புதன்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டது.

வாலிப முன்னணியின் உபதலைவர் தலைமையில் கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இத்தீர்மானம் சம்பந்தமாக மேலும் தெரிவிக்கப் பட்டதாவது :

சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியென்ற நிலையில் இருந்து அரசினர் மனம் இன்றுவரை மாறவில்லை. பிரதேச சபைகள் கூடத் தரமுடியாது என்று கை விரிக்கிறார்கள். தமிழ்ப் பிரதேசங்களில்அபிவிருத்தித் திட்டமெதுவுமில்லை. இத்தனையுடன் தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கப்படாதென முன்னாள் பிரதம நீதியரசர் திரு. பசநாயக்கா போன்றோர் கூறுகின்றார்கள்.

சிங்கள மகாஜனக் கட்சியை திரு. ஆர். ஜீ. செனநாயகா ஆரம்பித்த பின்னர் தமிழர்கள் தன்மானத்துடன் வாழ வேண்டுமானால் பிரிந்து தனித் தமிழ் நாடு அமைக்க வேண்டும்.

தமிழ்நாடு எவ்வாறு அமைய வேண்டு மென்பதை ஆராயும் பொறுப்பு ஐவர் கொண்ட ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி நடைபெறவிருக்கும் கட்சியின் பொதுச் சபையிற் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

## இளைப்பாறிய அரசாங்க ஊழியருக்கும் இலவச பிரயாணச் சீட்டு

இளைப்பாறிய அரசாங்க பென்ஷன் பெறும் ஊழியருக்கும் வருடத்தில் ஒரு சோடி புகையிரத இலவச பிரயாணச் சீட்டு வழங்கத் தேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விதவைகள், அனாதைகள் பென்ஷன் திட்டத்தின் கீழ் பென்ஷன் பெறும் ஆசிரியர்கள் இவ்வித சீட்டுக்கு உரித்துடையராவார். யூலை 7, 1968 இன் 744 ஆம் இலக்க திறைசேரியின் சுற்று நிருபத்தில் இதன் விபரம் அடங்கியுள்ளது.

## எதிர்க்கட்சிப் பிரசாரம் திசை திரும்பலாம்

மாவட்ட சபை மசோதாவுக்கு எதிராக நடத்தும் பிரசாரங்களை நிறுத்திவிட்டு திரு. ஆர். ஜீ. செனநாயக்காவின் கட்சிக்கு எதிரான பிரசாரங்களில் ஈடுபட வேண்டுமென்றும், ல. ச. ச. வுக்குள்ள புத்த பிக்குகளின் ஆதரவை அக்கட்சி குறைக்கலாமென்றும், எதிர்ப்பிரசாரம் நடத்தாவிட்டால் ஆர். ஜீ. கட்சி பலம் பெற்றுவிடலாமென்றும் எதிர்க்கட்சி எம். பி. க்கள் அபிப்பிராயந் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் மாவட்டசபை மசோதாவைத் தீவிரமாக எதிர்க்க வேண்டுமென்றுங் கருத்துகள் வெளியிடப்பட்டன.

இவ்வாறிருந்தும் ஆர். ஜீ. கட்சியில் சேர இரகசிய ஒழுங்குகள் செய்கின்றனர் சில ல. ச. கட்சியினர் என்றும் கூறப்படுகிறது

## சிங்கள ஊழியருக்கு 3 வருடத் தமிழ்ப் பயிற்சி தேவை

'தமிழ் மாகாணங்களுக்குச் சிங்கள ஊழியர்களை அனுப்புவதற்கு முன், அவர்களுக்கு தமிழ் மொழியில் குறைந்தது 3 வருடத்துக்காவது தமிழில் பயிற்சி அளிக்கவேண்டும்' என கிராமாபிவிருத்தி ஊழியர் சங்கக் கூட்டத்தில் திரு. டபிள்யூ. பி. கே. செனரத்ன அபிப்பிராயம் வெளியிட்டார்

தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பப்படும் ஊழியர்கள் தமிழ் தெரியாதிருந்தால் சிறந்த முறையில் தமது கடமையை நிறைவேற்ற முடியாதுஎன்றும், இதேபோன்று சிங்களம் தெரியாத ஊழியர்கள் சிங்களப்பகுதிகளில் சிறப்பாகக் கருமமாற்ற முடியாது என்றும் கூறிய அவர் தமிழ் தெரிந்தவர்களைத் தமிழ்ப் பகுதிகளில் கருமமாற்ற நியமிப்பது சிறப்பான பலனைத் தருமென்று கருத்து வெளியிட்டார்.

## செயற்கை இருதயம்

இருதய நோயாளிகளுக்கு மாற்று இருதயம் பொருத்துவதற்காக இறந்து போனவர்களைத் தேடி அலையவேண்டிய அவசியம் இல்லாத காலம் வெகு வேகமாக வந்துகொண்டிருக்கிறது. பழுதாகிப்போன இருதயத்தை வெட்டி எறிந்துவிட்டு அதற்குப் பதிலாக முற்றிலும் செயற்கையான இருதயத்தைப் பொருத்திக் கொள்வது எதிர்காலத்தில் ஒரு சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாகி விடப் போகிறது.

சொத்தைப் பல்லைப் பிடுங்கி எறிந்து பொய்ப்பல் கட்டிக்கொள்வதைப்போல, பழுதாகிப்போன இயற்கை இருதயத்தைக் களைந்து விட்டு செயற்கை இருதயத்தைப் பொருத்திக் கொள்வதென்றும் மக்கள் சகஜமாக எண்ணும் எதிர்காலத்துக்கு வழிவகுத்துக் கொடுக்கும் வகையில் மேற்கு ஜெர்மன் நிபுணர்களும், அமெரிக்க நிபுணர்களும் ஒருங்கிணைந்து கூட்டு முயற்சியாகச் செயற்கை இருதயம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாக அறிவித்துள்ளனர், மேற்கு ஜெர்மனியிலுள்ள மூனிச் நகரில் ஐரோப்பிய அறுவைச் சிகிச்சை ஆய்வுக்கழகத்தின் மூன்றுவது பேரவைக் கூட்டம் நடைபெற்றபோது இந்த அறிவிப்பு வெளிடப்பட்டது.

---

## கூட்டுறவும் நாமும்

பத்திரிகைகளில் தினசரி வெளியாகும் செய்திகளிலிருந்தும் அவைகள் தீட்டும் தலையங்கங்களிலிருந்தும் எமது நாடு இன்று எவ்வளவு தூரம் பிளவுபட்டிருக்கிறது என்பதை நாம் நன்குணரலாம். அவப்பேருகச் சில பத்திரிகைகள் இப்பிளவிற்கு மேலும் தூபமிட்டு வருவதைப் பார்க்கும் போது எமது மனம் மிகவும் வேதனைப்படுகின்றது.

முன்பொரு காலத்தில் கிராமங்களிலே அமைதியும், ஒற்றுமையும் நிலவின. ஆனால் இன்றோ கட்சியரசியல் புகுந்து கிராமங்களைப் போர்க்களங்களாக மாற்றி விட்டது.

இந்நிலையில் மக்கள் ஒருவரோடொருவர் அன்பால் பிணைக்கப்பட்ட ஒரு பூரண சமுதாயம் உருவாக வேண்டுமேயானால் அது கூட்டுறவு இயக்கத்தினாலேதான் சாத்தியமாகும். இந்த இயக்க மூலம் கிராமங்களில் மட்டுமல்ல, சகல பிரதேசங்களிலும் நாடு முழுவதிலுமே ஓர் உண்மையான சமுதாயத்தை உருவாக்கலாம். கூட்டுறவு இயக்கம் சர்வதேச இயக்கமாக ... மூலம் ஓர் உலக சமுதாயமும் இலகுவாக அமைக்கப்படலாம்.

எனவே, இன்று பிளவுபட்டிருக்கும் எமது நாட்டை ஒன்றுபடுத்த உண்மையான மக்களாட்சியை நாம் நிறுவ விரும்புவோமேயானால் அதனைக் கூட்டுறவு இயக்க மூலமே செய்ய முடியும். எடுத்துக் காட்டாகச் சில பகுதிகளிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சாதி, மத பேதமின்றி எல்லா மக்களையும் தமமகத்தே கொண்டுள்ளன. இத்தகைய சங்கங்களிலே மக்கள் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதற்கும், தமது கருத்துக்களை அமைதியான முறையிலே பரிமாறிக்கொள்வதற்கும் முடியும். இச்சங்கங்கள் ஏகமனதான முடிவுகளுக்கு வந்தால் அவைகளை உண்மையில் சமுதாயத்தின் அவதாரங்கள் என்று சொல்லலாம். இத்தகைய சூழ்நிலையில், ஐவரின் வாக்கு ஆண்டவனின் வாக்கு என்னும் கூற்றுப் பொருந்தும். நாம் கூட்டுறவுக் கொள்கைகளைச் செவ்வனே கடைப்பிடித்தால் ஆரம்பச் சங்கங்களின் பேராளர்களை உள்ளடக்கிய உயர்தரச் சங்கங்கள் ஒரு பெரும் பகுதியில் வாழும் சமுதாயத்தின் அவதாரங்களாகத் திகழலாம். இவ்வுயர்தரச் சங்கங்கள் விசேட நோக்கங்களுக்காக திறமையும், அனுபவமும் மிக்கவர்களை உப குழுக்களுக்கு நியமிக்கும் பொழுது அதனைச் சமூகத்தின் சார்பிலேயே செய்கின்றன. இக்கோணத்திலிருந்து நோக்கும் பொழுது கூட்டுறவு இயக்கம் உள்ளூராட்சி மன்றங்களைப் போன்று குடியாட்சியின் வெளிப்பாடு என்பது தெளிவாகும். தத்தமது பகுதிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பது கூட்டுறவுச் சங்கங்களின் கடமையாகும். இன்றைய நிலையில் கூட்டுறவு இயக்கம் இத்தகைய திட்டமில்லாது இயங்குவது திசையறி கருவியில்லாத கப்பல் கடலில் தடுமாறிச் செல்வது போலாகும். கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பினையும், கடமைகளையும் விரிவுபடுத்துவதன் மூலம் நாம் எமது நாட்டினை ஒன்றுபடுத்தி அதன் மேம்பாட்டிற்கு வழிவகுக்கலாமென்பது திண்ணம்.

— கூட்டுறவு

## ஒரு பேய்க் கதை

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்புக் கிருதியில் கையை ஊன்றிக் கொண்டு அவள் எனக்காகவே ஒரு அமுதபோல் சொருத்துக் கொண்டிருக்கிறாளா? கறுப்போ சிவப்போ என்று சொல்லமுடியாத பொதுநிறத் தோற்றம். மிகத்திறந்த ஏற்றமஞ்சள் நிறமைலோன் சாரி. கை இல்லாத ரவிக்கை. காற்று வீசும்போதெல்லாம் அழகாக அசைத்து எழில் காட்டிக்கொண்டிருக்கும் அவள் பேயா...? பெண்ணா? தலை வலிப்பதுபோல் இருந்தது எனக்கு.

பேய்களுக்கு கால்கள் இருக்காது என்று தாத்தா சொல்வாரே! கடைக்கண்ணால் அவளைப் பார்க்கிறேன். அவளுக்கு கால்கள் இல்லைத்தானு, அல்லது பஸ்தரிப்பு மண்டபத்தின் கீழே உள்ள தகரம் மறைக்கிறதா?

அமைதியாக ஒளிந்துக் கொண்டிருக்கும் கதிரைமாதாவின் இருத்தாதி என் நெஞ்சில் தெப்பு தருகிறது. நான் என்ன பெண்ணு? பேயாவது பிசாசாவது? அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டேன்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக குரல்கள் கேட்கத் தொடங்கின; பஸ் பிரயாணிகள் சேரத் தொடங்கினர், அப்பாடா, தொல்லை, தீர்ந்தது என்று அவளைப் பார்த்துவிட்டு எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

இந்த அழகி தென்னகத்தில் இருந்திருந்தால் திரைவானில் மின்னும் தாரகையாக ஒளிர்ந்திருப்பாள். எத்தனையோ தயாரிப்பாளர்கள் இவளை ஒப்பந்தஞ் செய்யக் காத்துக் கிடப்பார்கள். நானோ ரசனை இல்லாத முட்டாள்! அவளைப் பேய் பேய் என்றேனே என்று என அறியாமையை நினைத்து அப்படிச் சிரித்தேன்.

'கலோர கொழும்புக்கோ' என்ற குரல் என் கவனத்தைத் திருப்பியது. கண்டன, அருள், நிலவு கொண்டிருந்தான், நான் முல்லைத்தீவுக்குப் போவதென; மயமே உமது 'சூட்கேஸ்' என்றுன் அருள். பஸ்தரிப்பு மண்டபத்தை சுட்டிக் காட்டிவிட்டு, சோம்பல் முறித்துக் கொண்டேன். வா... டீக்கு ஒன்று குடித்துவிட்டு வருவோம் என்று தேநீர்க் கடையை நோக்கி நடந்தான், அந்த அழகியை மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு அருளுடன் சேர்ந்து நடந்தேன்.

பணிக்குளிரைப் போக்க, பெரிய கிளாஸ் அருகில் நின்று தேநீரைக் குடித்துவிட்டு, பொன்னையா அண்ணையின் கடையில் இருந்து திருப்புவதற்குப் பத்துநிமிடமாகிவிட்டது. அப்பொழுது பஸ்சும் சாதுக்கு வந்துவிட்டது. முண்டியடித்துக் கொண்டு பிரயாணிகள் ஏறினர். நான் பஸ்தரிப்பு மண்டபத்தில் வைத்த சூட்கேசை எடுக்க விரைந்தேன்.

அங்கே...

சூட்கேஸ் எங்கே போய்விட்டது? யாராவது தவறுதலாக எடுத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறியிருப்பார்களோ? பஸ்ஸில் ஏறி நானும் அருளும் தடவி அலுத்து கீழ இறங்கும் பொழுது அந்த அழகியைப் பற்றிய ஞாபகம் வந்தது. பல சில அவளைக் காணுமே; எங்கே போய் விட்டாள்?

அப்போது ஒரு முதியவர் "தம்பி நீலநிற சூட்கேசுப் பெட்டியோடை இளம் பொம்பிளை கார் ஒண்டு வந்து நிற்க அதிலை ஏறிப் போட்டுது" என்றது தான் தாமதம் "அதுதான் என் சூட்கேஸ் அதுதான் என் சூட்கேஸ்" என்று கத்திய என்னைக் கீழே இறக்கி விட்டுப் புறப்பட்டது பஸ்.

என்ன அக்கிரமம்! இப்படித் திருட்டுத் தொழில் நடத்தத் தாயும் கூட்டமிருக்கும் வரை பேய்கள் ஓழிந்து விடாது. ஆமாம் அவர்கள் தான் பேய்! இந்தப் பேய்கள் மரத்திலும் சுடலையிலும் அல்ல. கைலேஸ் சாறியில், காரிக உடையில் மறைந்திருக்கின்றது என்ற அழகை; நேரம் எதைச் செய்வது என்று புரியாத நிலையில் முழுமுழுத்தபடி வேப்பமரத்தைப் பார்த்தேன்.

என் எண்ணத்தை ஆமோதிப்பது போல் அந்தக் காகவேப்பின் கிளைகள் ஆடிக்கொண்டிருந்தன. அது பேய் பட்ட மரம் அல்லவா அது!

(யாவும் கற்பனை)

---

நிச்சேட் மூத்ததம்பி குணரத்தினம்

(பண்டத்தெருப்பு)

24 - 8 - 1958 இல் எய்திய மறுமைப் பிரவேசத்தின் பத்தாண்டு நிறைவு.

இது அவரன்பிற்குரியாரின் அழியா ஞாபகார்த்தம்.

—இயேசுவின் கையிற் காவல்—

---

புத்தக உலகம்!

## எழில் மிகு யாழ்ப்பாணம்

ஆசிரியர் : நா. சண்முகநாதன்

வெளியீடு : யாழ். மாநகரசபை

எழில்மிகு யாழ்ப்பாணம் கண்டோம். இது மாநகர சபையின் குடிநல - சுகாதார வார மலராக வெளிவந்துள்ளது. ஈழத்திலே இம்மலர் புதிய சாதனையொன்றினை ஈட்டியுள்ளது. ஈழத்தின் வரலாற்றிலே யாழ்ப்பாண மாநகர சபையே முதன்முதல் குடிநல — சுகாதார வாரத்தைக் கொண்டாடுகின்றது. அதனையிட்டு மலரும் அனுபந்தமும் வெளிவருகின்றனவென நுழைவாயில் பெருமிதத்துடன் கூறுகின்றது. பெருமைப்பட வேண்டிய விஷயந்தான். குடிநல வாரத்தின் நோக்கம் யாழ். மக்களிடையே நகரப் பற்றினை ஏற்படுத்துவது எனவும் நுழைவாயில் கூறுகிறது. அந்த இலக்கை அடையும் முயற்சிகளில் ஒன்ருக மலர் விரிகின்றது.

ஆசிச் செய்திகள் அனேகம் காணப் படுகின்றன. அறிஞர் நேசையா "உங்கள் நகர்" என்னெரு கட்டுரையை வரைந்துள்ளார். பண்டைக் காலத்தைப் போன்று, மீண்டும் ஐவரின்வாக்கு ஆண்டவனின் வாக்காவதற்கு ஏற்ற வழிவகைகளை அவர் கூறுகின்றார். யாழ்ப்பாணத்தைப் பற்றிச் சரித்திர ரீதியாகத் திரு. கந்தவனர், கலாநிதி இந்திரபாலா ஆகியோரும், புவியியல் நோக்கில் திரு. குணராசா அவர்களும், சமூகவியல் அடிப்படையில் யாழ்ப்பாணனும் எழுதியுள்ளார்கள். யாழ்ப்பாணத்தவர் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய குறிப்புக்கள் அக் கட்டுரைகளில் காணப்படுகின்றன. இனி யாழ் நகரின் - பூங்கா, நூலகம், வரிமுறை பற்றியும் கட்டுரைகள் காணப்படுகின்றன. கவிஞர் கந்தவனத்தின் கவிதை இன்பமளிக்க வல்லது.

"ஆற்றலாத ஊருக்கு
அழகு பாழென ருன்றவர்
கூறும் கூற்றுப் பொய்யெனக்
கொழிக்கு மழகு யாழ்நகர்"

என்ற அடி உயர்ந்த கவிதா சக்தியை வெளிப்படுத்துகின்றது.

மலர் குறுகிய காலத்திலே வெளியிடப் பட்டிருந்தாலும் கண்ணுக்கினிய படங்களும், யாவரும் விரும்பவல்ல அமைப்பினையுங் கொண்டு விளங்குகின்றது. கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் இன்னும் யாழ். நகரின் அழகிய காட்சிகள் எல்லாம் இம மலருக்கு மணமூட்டுகின்றன.

"சுகாதார ஒலி" என்பது இம்மலரின் அனுபந்தமாக வெளிவந்துள்ளது. வைத்திய அறிஞர்கள் எழுதிய ஆறு கட்டுரைகள் இதில் இடம்பெற்றுள்ளன. நீரிழிவு, இளம்பிள்ளை வாதம், திட்டமிடப்பட்ட குடும்பம், சுகவாழ்வு, மாநகர சுகாதாரம் பற்றி அறிஞர்கள் கூறுவது பயன் மிக்கதாகக் காணப்படுகின்றது.

"வெள்ளம் வருமுன்ன
மேயணை கட்டுதல்
வித்தகர் செயகை யம்மா
உள்ள முடிப்பு
மருந்தையுட் கொண்டுநோ
யோட்டல் விவேக மம்மா"

என்கிறார் கவிஞர் சுந்தரம்பிள்ளை. நல்ல கருத்துத்தானே.

— S. S. N.

---

## ஹெலன் கெல்லர் அம்மையார்

ஹெலன் கெல்லர் அம்மையார் தமது 87-வது வயதில் ஜூன் முதலாந் திகதியன்று காலமானார். கண் பார்வை இழந்தும், பேசும் சக்தியற்றும் இருந்தவர் — சுய முயற்சியினுல் முன்னேற்றமடைந்தார். அவருடைய விடா முயற்சியும் திடமும் உலகத்திலுள்ள வசதியற்ற மக்களுக்கு எடுத்துக் காட்டாகும். பிறக்கும்போது அவர் சாதாரணக் குழந்தையாகவேதான் பிறந்தார். அலபாமா மாநிலத்தில் டஸ்கம்பியா என்ற நகரில் 1880 ஆம் ஆண்டு ஜூன் 27 ஆம் திகதி பிறந்தார். ஹெலன் கெல்லர். 19 மாதக் குழந்தையாக இருக்கையில் நோய்வாய்ப்பட்டு அதன் காரணமாகக் கண்பார்வையிழந்தார். செவிப்புலனையுமிழந்தார். அப்பொழுது அவருக்குத் தெரிந்திருந்ததெல்லாம் ஒரு சில மழலைச் சொற்கள்தாம்.

### இளமையில்

கெல்லர் தைரியத்துக்கும் விடாமுயற்சிக்கும் உறைவிடமாக இருந்தார் என்ருல் அதிசயல்ல.

சென்ற இரண்டாண்டு காலமாக அவர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடந்தார். கடந்த மேமாதம இறுதி வாரத்தில் அவருக்கு மாரடைப்புக் கண்டது. 88-வது பிறந்த நாளுக்கு இன்னும் சில வாரங்கள் இருக்கையிலே யூன்மாதம் முதல் தேதி சனிக்கிழமையன்று காலமானர்.

### உறுதி

தமக்கு ஏற்பட்ட ஊனங்களை எப்படியாவது வென்று விடுவது என்று உறுதிபூண்டு உழைத்து வெற்றி கண்டவர் கெல்லர். உலக மக்கள் எல்லோருடைய பாராட்டுதலையும் பெற்றவர் அவர். எல்லா நாட்டுக் குருடர்களின் சார்பில் அவர் எல்லா உலக நாடுகளுக்கும் சென்றிருக்கிறர்.

ஏழு வயதுச் சிறுமியாக இருக்கையில் தமது விருப்பங்களைத் தெரிவிக்க முடியாத நிலையிலே ஏமாற்றம்; சோர்வினுல அடிக்கடி கோபமும் ஆத்திரமும் அவருக்கு ஏற்படுவது வழக்கம், ஆனுல் அப்பொழுது இருந்த கெல்லர் வேறு; உலகம் அறிந்த கெல்லர் வேறு. உலகிலேயே மிகத் தெளிவாகப் பேசக் கூடிய, தெளிவாகக் கேட்கக்கூடிய தன்னம்பிக்கையுடைய ஒரு பெண்ணாக விளங்கினர் அவர்.

தமது வாழ்நாளிலே ஹெலன் கெல்லர் மார்க்ருவைபிற், ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ், ஜோன் கிரீன் லீப்விட்டியர், ஆன்ட்ரு கார்னகி போன்ற உலகப் புகழ் பெற்ற பெரியோர்களுடன் தொடர்பு கொண்டார். இந்தியாவுக்குச் சென்றிருக்கையில் பிரதம மந்திரி ஜவஹர்லால் நேருவைச் சந்தித்தார்.

கெல்லருக்கு ஏழு வயதாக இருக்கையில் அன்னி ஸலிவன் என்ற மாது (பிற்பாடு திருமதி ஜோன் மேஸி) அவருக்கு ஆசிரியையாகவும் உற்ற துணையாகவும் இருந்து வந்தார். 1936 ஆம் ஆண்டில் திருமதி மேஸி காலமானது வரை உறவு இருந்து வந்தது. திருமதி மேஸிதான் கெல்லருக்கு முதலில் கைகள் கொண்டும், பிறகு விரல் நுனிகள் கொண்டும் "பேசக்" கற்றுக் கொடுத்தவர்.

### முதல் நூல்

இரண்டு பேரும் சேர்ந்து மாசசூஸெட்ஸ் மாநிலத்தில் கேம்பிரிட்ஜ் நகரில் இருக்கும் ராட்கிளிப் கல்லூரியில் படித்தனர். இங்குதான் 'என் வாழ்க்கை வரலாறு' என்ற நூலைக் கெல்லர் எழுதினர். இதுவே அவருடைய முதல் நூலாகும். அவர் மொத்தம் 11 புத்தகங்கள் எழுதியிருக்கிருர். கடைசிப் புத்தகம் "நாம் நம்பிக்கை கொள்வோமாக" இது 1941 இல் வெளியிடப்பெற்றது.

குருடர்களின் சார்பிலே ஹெலன் கெல்லர் பல தடவைகளில் உலகப் பயணம் செய்து வந்திருக்கிருர்.

கிளாஸ்கோ, பெர்லின், புதுடில்லி, விட்வாட்டர்ராண்டு, பல்கலைக் கழகங்கள் போன்றவை அவருக்குக் கௌரவப் பட்டங்கள் வழங்கின. ஹார்வர்டு, டெம்பிள் பல்கலைக் கழகங்கள் கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்தன.

அவர் கடைசியாக உலகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது 1957 இல் ஆகும். அப்பொழுது அவர் ஐந்து நாடுகளுக்குச் சென்று வந்தார்.

— அமெரிக்க செய்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு யூலை மீ 19 ஆம் நாள்

# பழமையும் புதுமையும்

சுதந்தரமடைந்த — பார்க்கு மிடத்து இந்நாட்டுப் பெரும்பான்மையரே சுதந்தர மடைந்ததாகத் தென்படும் — நம்நாட்டில் பழமை பெருமளவில் பாராட்டப் படுகிறது. அதன் உரிய இடம் காக்கப்பட, திரும்பவும் அது முன்னைய நிலையை இந்நாட்டில் அடைய வழிகள் ஆராயப் படுகின்றன. ஆலோசனைகள் கூறப்படுகின்றன. அவற்றில் நன்மையானவைகளும் தீமையானவைகளும் கலந்து காணப் படுகின்றன.

பொருளாதாரத்திலே — சிறப்பாக விவசாயத்திலே — நம் பண்டைய நிலையையடைய முயற்சிகள் நடப்பது நன்மையே. கலையும் பண்பும் பேணப்படுவதும் நன்மையே. மக்களின் சுய தேவைகளில் கவனமும் விருத்தியுங் காண்பதும் நன்மைதான். ஆனால் இந்நாடு ஒரு சாராருக்கே சொந்தமாக இருந்தது ; ஒரு மதமே இந்நாட்டுக்குரியது என்ற எண்ணத்தில், மறு சாராரின் உரிமைகளை மறுத்து, மறந்து, நசுக்கி, அச்சாராரின் பண்டைய நிலையைப் பேணிக் காக்க எடுக்கப்படும் முயற்சிகள்தான் தீமையானவை; நாட்டுக்கு நாசமானவை.

சிங்களவரும், தமிழரும், இஸ்லாமியரும் பிறரும் இந்நாட்டில் பன்னெடுங் காலமாய் வாழ்ந்து, இந் நாட்டைத் தாய்நாடாகக் கொண்டு உரிமை பாராட்டுவதில் பெருமை உடையவர்கள். இந்நாட்டு விடுதலைக்கு ஒன்றுபட்டு உழைத்தவர்கள். யாவரும் இந்நாட்டு மக்களேயாவர். சுதந்திர இலங்கையென்றால் அது சிங்கள இலங்கையாக முடியாது. சிங்கள இலங்கையாக்க முற்பட்டதாலேயே இன்று வகுப்புவாதங்களும் பகை விரோதங்களும் தலைதூக்கியுள்ளன. இன்றைய நிலையில் இலங்கை சிங்கள - புத்தருடையதல்ல, இலங்கையைத் தாயகமாகக் கொண்ட யாவரினதுமே என்ற எண்ணம் அவசியம், அதை மறந்து பழைய சிங்கள - புத்த இலங்கை யுருவாக்கக் கனவு காண்பது துர்லபம். அதனால் வந்த வினைதான் நாடுபிரியவேண்டுமென்ற எண்ணம்.

தனித்தமிழ்நாடு ஒன்று ஆக்கி, நாட்டைத் துண்டு போடுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன வென அஞ்சி அவலக் குரல் எழுப்பும் அரசியல்வாதிகள், அப்படியொரு நிலை வந்தாலும், வரக் காரணமென்ன, வராது தடுக்க வழியென்ன, அவசியமென்ன வென்றுணர மறந்து, பழமை பேசிச் சிங்கள இனத்தின் நலனை மாத்திரம் கருத்திற் கொள்வது ஏன்? பழமையான வழக்கப்படி இந்நாடு ஒருகால் தனித்தமிழ் நாடாயும், மறுகால் தனிச் சிங்கள நாடாயும் மாறவும், நாட்டில் குழப்பங்களும் சண்டைகளும் நடக்கும் பழமையும் பேண விரும்புகிறார்களோ என்னவோ?

இவ்வித பழமை பேணல் இன்றைய நிலையில் தகாதது ; யாவரும் இந்நாட்டு மக்களேயாதலின் யாவரது உரிமைகளும் பேணப்பட்டு, சுதந்தரம் எவருக்குமுரியதாக வேண்டுமென்ற நல்நிலையில், பெரும்பான்மை இனத்தவர்களிடமிருந்து சிறுபான்மையினத்தாருக்கு நம்பிக்கையூட்டும் குரல்கள் கேட்கின்றன. "தமிழர் சிங்களமும், சிங்களவர் தமிழும் கற்றால் பிரச்சனைகள் இலகுவாகத் தீரும்" என்றார் ஒரு மூதவை உறுப்பினர். தமிழ்ப் பகுதிகளில் சேவை செய்யச் செல்லும் அரசாங்க ஊழியர் தமிழறிவு பெற்றாக வேண்டுமென்ற எண்ணம் எழுந்துள்ளது.

இப்படியான நல்ல வார்த்தைகளைக் கேட்கும்போது சிறுபான்மையினம் மகிழ்ச்சியடைகிறது. ஆனால் சிறுபான்மை இனங்கள் தமக்குள் வேறுபட்டு, சாதிமரபு பேசி, பழமை காக்க முற்படுவது வருந்தத்தக் குரியது. சிறுபான்மையருக்குள் ஒரு சிறுபான்மை ; அவருக்குள் பெரும்பான்மையருக்குள்ள உரிமைகள், சுதந்திரம் சிறுபான்மையருக் கில்லை யென்ற எண்ணம் ; அதைக் கண்டு மற்றையோர் களினம், இப்படியான நிலை — பழமை காத்தல் — சாபக்கேடாகும். உயர்வு தாழ்வோ, பழம் பெருமை பாராட்டலோ ஓரினத்தில் இருக்கும்வரை, ஒரு நாட்டில் இருக்கும் வரை, அந்த இனமோ நாடோ உருப்பட முடியாது.

பெரும்பான்மை யானவர்கள் சிறுபான்மை யானவர்களின் உரிமைக்காக, விடுதலைக்காகக் காலத்துக்கு தேவைக்கு ஏற்ப விட்டுக் கொடுக்க மியல்பு வரும் வரை நன்மை காண்பதரிது. இந்த உண்மை உணரப்படத் தொடங்கியிருக்கும்போது, தமிழினத்துள் மட்டும் என்று சொல்வது பொருத்தமாயிராதெனினும், சாதிவேறுபாடு பாராட்டப்படுவது எந்த மதத்துக்கும், எந்த இனத்துக்கும் நன்மைதரும் பழமை யாகாது. பலாத்காரத்துக்கும் பிரிவினைக்கும் வழிநடத்தும் பழமை நாட்டைக் கெடுக்கும் ; இனத்தைப் பாழாக்கும். புதியன புகுந்து, புதுமை மணங் கமழ, பொலிவுடன் வாழ வழிகாண்பதே மேல்.

யாவரும் இந்நாட்டு மக்கள் என்ற எண்ணம் இந்நாட்டுப் பெரும்பான்மையரிடத்து உண்டாவதும், யாவரும் இறைவன் மக்கள் என்ற எண்ணம் இந்நாட்டு இனங்களிடையே உண்டாவதும் என்நாளோ? அந்த நாளே சகலருக்கும் சுதந்தரமான நாளாகும்.

# பவுலும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷமும்

**( Paul and the Gospel of Jesus Christ )**

[ வண. டாக்டர் ஜேம்ஸ் மேதர் பேர்க்கரின் ஒரு பிரசங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது. ]

( முற்றொடர் )

IV

பவுலின் பிரசங்க விஷயம் ஒன்றே ஒன்று; அது இயேசு கிறிஸ்து. பவுல் எழுதிய 13 திருபக்கங்களிலும் தன்னுடைய இரட்சகரின் மாட்சிமையைப் பற்றி அவர் வற்புறுத்திய நாலு சத்தியங்கள் :— இயேசு கிறிஸ்து (1) மனுஷனுக்கு விடுதலை கொடுக்கிறவர், (2) ஜாதிகளுக்கிடையிலுள்ள பிரிவினைகளை அகற்றி, யாவரும் உலகத்தில் ஒரு குடும்பமாய் வாழச் செய்கிறவர், (3) உலகத்திற்கு முற்பார்வை அருளுகிறவர், (4) மனுஷனுடன் ஒருகாலும் பிரியாது கூடி வாசம் பண்ணுகிறவர்.

(5) இயேசு கிறிஸ்து, மனுஷனைப் புதிய ஆளாக்குகிறவர். இயேசுவுக்கு முற்றாதலாய் வந்த யோவான் ஸ்நானன், "மனந்திரும்புதலுக்குரிய கனிகளைக் கொடுங்கள்", இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைக்கப்பட்டிருக்கிறது" (மத்தேயு 3 : 8, 10 ) என்று பிரசங்கித்தான். ஆனால் சில மாதங்களின்பின் இயேசு வந்து 'மனந்திரும்புங்கள்' (மத்தேயு 4 : 17) என்று கூறி, அதனுடன், அதாவது, "மனந்திரும்புங்கள்+மனுஷனுக்குப் புதிய ஜீவியம் ஆயத்தமாயிருக்கிறது." என்ற ஒரு செய்தியையும் முன் வைத்தார். இதுவே 'பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது' என இயேசு மத். 4:17 இல் கூறியதின் கருத்து. ஒரு மனுஷன் கடவுளுடைய ராஜ்யமாய் மாறுவது, இயேசு கிறிஸ்துவுடைய சுவிசேஷத்தின் பெரிய செய்தி. ஒவ்வொரு ஆளுக்குள்ளும் ஒரு பெரிய சேனை இருக்கிறது. ஓர் ஆளுடைய அன்பு, பொறுமை, அறிவு, படித்த சத்தியங்கள், முதலியவை, போர்வீரர் போல இயேசுவாகிய 'தளபதியின்' கீழ் யுத்தம் செய்யும் பொழுது, அந்த ஆள் மூலம், அதிசயங்கள் நடக்கின்றன. சென்ற பெரிய உலக யுத்தத்தில் பிரித்தானியருடைய சத்துராதிகளாயிருந்த ஜெர்மனியர் இப்போது பிரித்தானியருடைய பக்கமாக மாறி, அவர்களுக்காக யுத்தம் பண்ணுவதுபோல, நமக்குள் கடவுளுக்கு மாறாய் யுத்தம் செய்த போர்வீரர், கடவுளுடைய போர்வீரராகி நாமே கடவுளுடைய ராஜ்யமாக இருப்பது சுவிசேஷத்தின் வேலை. கடவுள் மனுஷனை ஆண்டு நடத்தும்படியாக, மனுஷன் தன்னை ஒப்படைக்கும்பொழுது அவனுக்குப் புதிய ஜீவியம் ஆரம்பமாகிறது. "புதிய" என்ற வார்த்தை இயேசுவுடைய வாயில் அடிக்கடி இருந்தது. "புதிய வஸ்திரம்" "புதிய திராட்சரசம்" (மத்தேயு 9 : 16-17). "புதுத் துருத்தி" (மாற்கு 2 : 22); "புதிய பிறப்பு" (யோவான் 3 : 3) பரலோக ராஜ்யம் மீன் வலை போலிருக்கிறதென்ற உவமையில், இயேசு புதிய பொக்கிஷத்தைப் பற்றிக் கூறினர் (மத்தேயு 13 : 52).

பவுல் இயேசு கிறிஸ்துவினால் முழுவதும் ஒரு புதிய ஆளாய் மாறினர். II கொரிந்தியர் 5 : 17 இல் "ஒருவன் கிறிஸ்துவுக்குள் ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின" என்று கூறினர். ஒரு மனுஷன் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமடைகிறான் என்று பரி. பவுல் ரோமர் 12 : 2 இல் எழுதினர். அவன் புதிதாக்கப்பட்டுப் புதிய மனுஷனுவதைப்பற்றி கொலோசெயர் 3 : 10 இல் எழுதினர் :— "கிறிஸ்துவுக்குள் விருத்த சேதனமும் ஒன்றுமில்லை, விருத்த சேதனமில்லாமையும் ஒன்றுமில்லை; புதுச் சிருஷ்டியே காரியம்' என்று கலாத்தியர் 6 : 15 ல் கூறினர். நிக்கொதேமுவுக்கு "மறுஜென்ம" முழுக்கைப்பற்றி எச்சரித்தார். அது இல்லாமல் இரட்சிப்பு இல்லை. இயேசு கிறிஸ்து, புதிய பிறப்பை மனிதனுக்குக் கொடுக்கிறவர். மனிதனைப் புதிய ஆளாக்குகிறவர். பழைய கண்களுக்குப் புதிய பார்வை, பழைய காதுகளுக்குப் புதிய இனிய சங்கீதத் தொனி, அருளுகிறவர். பழைய உலகத்தில் இருந்தாலும், அது மாறிப் புதிய வானமும் புதிய பூமியுமாயிருக்கின்றது. "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள், கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" என்று பவுல் எபேசியருக்கு எழுதினர், (எபேசியர் 2 : 13,)

ஒரு மனிதன் மாறிப், புதிய ஆளாய் வரக்கூடுமா? என்று சிலர் கேள்வி கேட்கின்றனர். எரேமியா தீர்க்கதரிசி (13 : 23) எழுதியதை எடுத்துக் காட்டுகின்றனர்; "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ?" இக்கேள்விக்கு இயேசு கிறிஸ்து கொடுக்கும் விடை இரண்டு :— (1) ஆம், எரேமியா சொன்னது முழுவதும் உண்மை. மனிதன் தன்னைத்தான் மாற்ற முடியாதவன் சுய இரட்சிப்பு ( Self salvation ) இல்லை.

இன்று பலர், கோபக் குணம் முதலிய சகலவிதமான பாவங்களிலிருந்து குளிகைகள் (Pills) மூலம் தங்களை மீட்டுக் கொள்ளலாம் என்று பிரயாசைப்படுகிறார்கள்' சில தருணங்களில், சொற்ப காலச் சுகம் ( Temporary cure ) காணப்படக் கூடும். ஆனால் இயேசு கொடுக்கும் சொஸ்தம், கோபக் குணத்தின் வேருக்கு மருந்து செய்தல். உங்களுக்குத் தெரியும், கோபக் குணத்தின் ஆணிவேர் தற்பெருமை. "மனந்திரும்பி" என்று இயேசுவின் சுவிசேஷம் வற்புறுத்தும் செய்தி, ஆணிவேருக்கு இயேசு கொடுக்கும் மருந்து. நாங்கள் செய்யும் நற்கிரியைகளால் நாம் நம்மை இரட்சித்துக் கொள்ள முடியாதென்பது நம்முடைய வேத உபதேசம். இன்று, 'கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு என்ன அத்தாட்சி? 'மோட்சம் எங்கே' 'நரகம் எங்கே?' 'மற்ற மார்க்கங்களில் உள்ளவர்களுக்கு இரட்சிப்பு இல்லையா? என்று சிலர் கேள்விகள் கேட்கிறார்கள். ஆனால், இவைகளிலும்கூட முக்கியமான கேள்விகள், 'நான் நல்ல சீவியம் செய்வதற்கு வழி என்ன?' 'நான் செய்யும் தீமையை விட்டுவிட எனக்கு உதவி செய்யும் வழி உண்டா'? 'கடவுள் என்னைச் சிருட்டித்த நோக்கத்தை நான் எப்படிச் சரியாய் நிறைவேற்றக் கூடும்'? என்பனவாகும்.

(2) யோவான் சுவிசேஷம் 15 : 5 இல் இரட்சகர், "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக் கூடாது." என்றார்.

மனுஷனைச் சிருட்டித்தவரே மனுஷனை மாற்றிப் புதிய ஆளாய்ச் சிருட்டிக்க வேண்டும். எத்தியோப்பியனைச் சிருட்டித்தவரால் மாத்திரமே மாற்ற முடியும், சிவிங்கியின் புள்ளிகளைச் சிவிங்கி மாற்ற முடியாது, சிவிங்கியைச் சிருட்டித்தவர் மாத்திரமே மாற்ற முடியும். இதுதான் கிறிஸ்தவ சுவிசேஷம்.

மனுஷன் புதுச் சிருட்டியாகுதல் முழுவதும் கடவுளின் இரக்கத்தால், கடவுள் மனுஷனில் நடத்தும் சிருட்டிகரின் செய்கையாகும்' நியாயப் பிரமாணமாவது, நல்ல உபதேசங்களாவது மனுஷனைப் புதிய ஆளாக்க முடியாதவை, இவை சரியெது பிழையெது என்று மனுஷனுக்குக் காட்டுபவை. மனுஷன் எது செய்ய வேண்டும், எது செய்யக் கூடாதென்றும், எப் பாதையில் நடக்க வேண்டும், எப் பாதையில் நடக்கக்கூடாதென்றும் இவை வெளிப்படுத்துபவை.

இயேசு கிறிஸ்துவே எல்லாவற்றிலும் எல்லாம் என்பதே பவுலின் சுவிசேஷம். இயேசுவே சபையின் அஸ்திபாரம், அவரே சபையைக் கட்டுகிறவரும், இயேசுவே மனுஷனின் பாதை, அவரே பாதையில் செல்வதற்கு மனுஷனின் துணை. இயேசுவின் சிலுவையில் நாம் அறையப்பட்டு மரிக்க வேண்டும், அவருடைய சிலுவையிலேயே நமக்குப் புதிய சீவன அருளப்படுகிறது. அவருக்காக நாம் எல்லாவற்றையும் விட்டு (லூக்கா 5:15) அவரைப் பின்பற்ற வேண்டும். எல்லாவற்றையும் நாம் பெற்றுக்கொள்ளும் வழியும் அவரே (மத். 6 : 33 ).

கிறிஸ்து மார்க்கத்தின் மையம் அல்லது நடுநிலையம் இயேசு கிறிஸ்து. கிறிஸ்தவனு யிருத்தலின் கருத்து சில கொள்கைகளை ஏற்றுக்கொள்ளுதல் அல்ல, ஓர் ஆளுடன் இருக்கும் சம்பந்தம். அந்த ஆள் இயேசு கிறிஸ்து. இதுவே பவுலின் சுவிசேஷம்.

## சிந்தியுங்கள்

"அவர் எங்கு போகிறார் என்பதை நான் அறிவேன்"

மத்தேயு ஹென்றி என்பவர் வேதாகமத்திற்குச் சிறந்த வியாக்கியான நூல் ஒன்று இயற்றியிருக்கிறார். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தவர், ஒருவரும அவரை அறியார்' அவர் ஓர் ஐசுவரியவானுடைய மங்கையை மணக்க விரும்பினார். அதற்குப் பெண்ணின் தகப்பனார் அனுமதிக்கவில்லை. தகப்பனார் மகளிடம், "அவன் ஒரு சிறந்த கல்விமானும் ஒப்பற்ற பிரசங்கியுமாயுமிருக்கலாம். ஆனால் அவனுடைய பூர்வீகத்தை — அதாவது எங்கிருந்து வந்தான் என்பதை நாம் அறியோமே" என்றுரைத்தார். அதற்கு அவர் மகள், "அப்பா! அவர் எங்கே போகிறார் என்பதை நான் அறிவேன், நான் அவரோடு போக விரும்புகிறேன்" என்றாள். அதைக் கேட்டுத் தந்தையார் உடன்பட வேண்டியதாயிற்று.

திருமணம் செய்து கொள்ளும் ஒவ்வொரு பெண்ணும் இதைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க வேண்டியது அவசியம். பொதுவாகப் பெற்றோர் தங்களுடைய பெண்களுக்கு வரன் (மாப்பிள்ளை) தேடும்போது குலம், செல்வம், கல்வி, உத்தியோகம்—இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் வாலிபன் தங்களுடைய பெண்ணை ஆவிக்குரிய வாழ்க்கையில் எப்படி நடத்துவான், இறுதியில் எங்கு கொண்டு சேர்ப்பான் என்பதை மிகப் பலர் சிந்திப்பதே இல்லை. ஆதலால் மணமக்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடங்குங்கால் ஆவிக்குரிய தூய்மையான வாழ்க்கைப் படிகளில் கால் எடுத்து வைப்பார்கள் என்றால் அவர்கள் எத்தனை பாக்கியம் நிறைந்தவர்களாயிருப்பார்கள்.

"தேவன் அதைக் காண்பார்"

ஒரு சிற்பி ஒரு சிலையின் பின் பாகத்தைப் பணி தீர்த்துக் கொண்டிருந்தான், அச்சிலை ஒரு பெரிய ஆலயத்தின் மாடத்தில் வைக்கப்பட வேண்டியது. சிற்பி வேலை செய்து கொண்டிருப்பதை ஒருவர் கவனித்துச் சிற்பியைப் பார்த்து, "ஐயா! நீர் ஏன் சிலையின் பின் புறத்தைச் செய்வதில் இவ்வளவு கடினமாய் உழைக்கிறீர்? இதை ஆலயத்தின் மாடத்தில் வைப்பார்கள். பின் பாகத்தை ஒருவரும் காண முடியாதே" என்று சொன்னார். அதற்குச் சிற்பி, "கடவுள் அதன் முன் புறத்தையும் பின் புறத்தையும் கவனிப்பாரே ; அதனால்தான் நான் என்னு லியன்றவரை நன்றாய்ச் செய்து முடிக்கப் பார்க்கிறேன்" என்றான். மனிதன் முகத்தைப் பார்க்கிறான் ; கர்த்தரோ மனிதனின் இருதயத்தின் ஆழத்தை நோக்கிப் பார்க்கிறார்.

சிறு கதை

# ஒரு பேய்க் கதை

இ. வ. அரியரத்தினம்

வலிகாமம் மேற்கில் உள்ளவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் அந்த வேப்பமரத்தைப்பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தார்கள். நாடு முழுவதும் வேப்பமரங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த வேப்பமரத்துக்கு மட்டும் தனிப் பெருமை எப்படி வந்தது? அது சாதாரண வேப்பமரம் தான். ஆனால் காகவேம்பு என்ற பெயர்தான் பலராலும் சொல்லப்பட்டு வந்தது.

பண்டத்தரிப்பு சந்தியின் தென்புறமாக மகளிர் கல்லூரி மதிற்சுவருடன் நெருங்கி ஓங்கி வளர்ந்து நிற்கும் இந்த வயோதிப வேப்பமரம் எத்தனையோ தலைமுறைகளைக் கண்டு களித்த மரம், அங்கொன்றும் இங்கொன்றுமாக சரப் பசுமை உள்ள இரண்டொரு கிளைகளைத் தவிர ஏனையவை ஒடிந்தும், பட்டை கழன்றும், வெறும் குச்சியாகவும் காணப் படுகின்றன.

சமர் பத்தடி சுற்றளவில் பெருத்திருக்கும் அந்தமரத்தின் அடியில் உள்ள பட்டைகள் கர்ப்பிணிகளும் உடல்நோவு கொண்டவர்களும் அவித்துக் குளிக்கும் கைங்கரியத்துக்கு அடிக்கடி பயன்பட்டு வந்தன. பண்டத்தரிப்பில் மிஷனரிமார் 'மைலிக்வெல்' என்ற கல்லூரியையும், திருச்சபையையும், இலங்கையின் முதலாவது டிஸ்பென்சரியையும், அமைப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் இன்று தெரியும் அதே வயோதிப தோற்றத்துடன் இக் காகவேம்பு காணப் பட்டதாகக் கதைப்பார்கள். உண்மை அதுதானோ தெரியவில்லை! மிஷனரிமாரின் தன்னலமற்ற சேவைக்கு எடுத்துக்காட்டாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது இந்த வேப்பமரம் என்று கதைப்போரும் உளர்.

அதிகாலை நாலரை மணிக்கு மாதகலில் இருந்து பண்டத்தரிப்பூடாக யாழ்ப்பாணம் செல்லும் யாழ்தேவி பஸ்ஸை நோக்கி அந்த வேப்பமர வேலில் அமர்ந்திருந்தபோதுதான் அந்த வேப்ப மரத்தைப்பற்றி இப்படி எண்ணிக் கொண்டேன்,

எனக்குப் பத்து-பதினொரு வயதாக இருக்கும்போது தாத்தாவின் மாட்டு வண்டியில் ஏறி அவ்வழியால் சந்தைக்குப் போவதுண்டு. ஐயையோ ...... அப்போதெல்லாம் தாத்தா சொன்ன அந்தக் கதைகளைக்கேட்டு நான்பயந்திருக்கிறேன். தாத்தாவோடு சந்தைக்குப்போக மாட்டேன என்று மறுத்திருக்கிறேன்,

இது எல்லாம் பழங்கதை. இப்போது எனக்கு வயதாகிவிட்டது, நான் எதற்குப் பயப்படப் போகிறேன. பேயாவது பிசாசாவது! தாத்தா சொன்னது இதுதான்: ஒரு சோடி முனி அந்த வேப்பமரத்தில் இருக்கிறதாம்; இரவில் நடுவேளை நேரத்தில் உலாவ வருமாம்; வருகிற வழியில் வைக்கோல் வண்டில், புகையிலை வண்டி ஆகியவற்றைப் புரட்டிவிடுமாம்! நல்ல குணம் வந்தால் தோட்டக்காரனை எழுப்பி மரவள்ளிக்கு தண்ணீர் இறைக்க உதவி செய்யுமாம். இரவில் வாண விளையாட்டுகள் நடத்துமாம். இப்படித் தாத்தா சொல்வதை ஞாபகத்தில் வைத்து நித்திரையில் 'ஐயோ ஐயோ' என்று சத்தம் வைத்திருக்கிறேன.

இப்போது அந்த முனிகள் எங்கே போய்விட்டன? எல்லாம் கட்டுக்கதை! இராப்பகலாக பஸ் ஓடுகிறது. விடியும் வரை தெருவிளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. முன்னாலே தபாற்கந்தோர், எதிரே மகளிர் கல்லூரி. இரண்டு புறமும் இரண்டு பெரிய நிலையங்கள். நெருக்கமாகக் கடைகள், இத்தனை சந்தடிகளுக்கு மத்தியில்.........பேயாவது பிசாசாவது! மூட நம்பிக்கைகள்! இந்த மரத்தில் இப்பொழுதும் அந்தப் பேய்கள் இருந்தால், அதிகாலை நாலரைமணி பஸ்ஸைப்பிடிக்க நாலுமணிக்கே வந்து இந்த வேலில் இருக்கும் என்னைச் சும்மா விட்டுவிடுமா? நான் எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

மகளிர் கல்லூரி மதிற்சுவரைக் கடந்து அலைபாய்கிறது என் கண்கள். அன்று மிஷனரி அமைத்த வைத்திய நிலையம், வேயப்படாத கூரையோடு, விளக்கேற்றப் படாத இருள் குகையாக திறக்கப்படாத யன்னலும், தூசி படிந்த கோலமுமாக இருப்பது தூரத்தில் எரிந்து கொண்டிருந்த 'மேர்கூரி' ஒளியில் தெரிந்துகொண்டிருந்தது.

இதே சரித்திரச் சின்னம் தென் இலங்கையில் இருந்தால், அதற்கொரு ஆண்டு விழா, ஸ்தாபகருக்கு ஒரு சிலை... எமதுவர்களில்......? இப்படி ஒடிபது என் சிந்தனை!

ஏன் வேயப்படவில்லை என ஒருபிரமுகரைக் கேட்டதற்கு அவர் சொன்ன பதில் எனக்குத் தெளிவாகப் புரியவில்லை!

எனது பார்வை பட்டுத் தெறிக்கிறது! நான்கு புறம் மதிற்சுவர் சூழ விக் கட்டிடங்கள், கடந்த காலங்கள் கிறிஸ்தவ நிர்வாகத்தில் இயங்கினதும், சர்வ மதத்தவரும் கற்று வாழ்க்கையை அது அமைத்துக் கொண்ட கல்லூரி அல்லவா

எனக்கு நல்ல ஞாபகம் புளிய மரத்துக்குக் கீழ் இருக்கும் சறுக்கி விளையாடும் மேடையில் சறுக்கி விளையாடியிருக்கிறேன் ...... அந்தப் பொற்காலவினைவுகள் வரைவிட்டுப் பிரிந்து சென்றபின்பும் நீங்கவில்லையே!

எங்கும் புகார்போன்ற பனிமூட்டம். அடிக்கடி வீசும் 'சில்' என்ற குளிர்காற்றில் உடம்பு நடுங்கியது, எழுந்து அங்கும் இங்குமாக நடந்தேன். பொழுது போக வேண்டுமே! பஸ் வருவதற்கு இன்னும் அரை அல்லது முக்கால் மணி நேரம் இருக்கிறது.

பல் பிரயாணிகள் இருப்பதையில் செல்வதற்காக அமைக்கப்பட்ட கட்டிடத்தில் சாய்ந்துகொண்டு வானத்தில் உள்ள நட்சத்திரங்களில் எது ஒளி கூடியது என்ற அனுவசிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன்,

'சரக்... சரக்... சரக்சரக்'

சத்தம் வந்த திசையை நோக்கினேன். ஆகா ... இவள் அல்லவோ அழகி, இளமை — அழகு - ஒய்யாரம் — எல்லாம் ஒருங்கு அமைந்த அழகிய இளம் பெண் ஒருத்தி வந்து கொண்டிருந்தாள், நிச்சயமாக அவள் பண்டத்தரிப்பையோ அதன் சுற்றுக் கிராமங்களையோ சேர்ந்தவள் அல்லள்! அவள் யார்? யாராயிருந்தால் எனக்கென்ன? மீண்டும் வானத்தைப் பார்க்கிறேன். தெரிந்தும் தெரியாமலும் நின்ற அந்த தேய்பிறைச் சந்திரனை வேப்ப மரத்தின் கிளை மறைத்துக்கொண்டிருந்தது,

என் நெஞ்சு திக்கென்று அடித்துக் கொண்டது. பண்டத்தரிப்பு கோட்டியில் நின்ற அந்த அழகியையும் பாரிய வேப்ப மரத்தையும் மாறிமாறிப் பார்த்தபோது என் உடம்பு நடுங்கத் தொடங்கியது. அப்போதெல்லாம் என் தாத்தா சொன்ன கதைகள் மின்னல் வேகத்தில் நினைவில் வந்தன. பேய்கள் பெண்களைப் போல்கூட வேடமெடுக்குமாம்,

( தொடர்ச்சி 2ஆம் பக்கம் )

## சகலமும் கிறிஸ்துவுக்குள்

"பரலோகத்தில் இருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டும்." எபே. 1 : 9

கடவுள் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பினதன் நோக்கம் என்ன? அவர் பாவ மாம்சத்தின் சாயலில் வந்து, உலகத்தின் பாவத்தைச் சுமந்து, நமக்காகப் பாவமாகிச் சிலுவையில் மரித்த காரணம் என்ன? தேவன் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றி முடித்த சகல காரியங்களும் எதற்காக? இது வரை நாம் அறிந்து கொண்டதென்ன? கடவுள் தன் குமாரனை உலகத்தில் அனுப்பின விசாலமான நோக்கத்தை நாம் அறியவில்லை. நமக்கு வியாதி வந்த நேரம் வைத்தியனைத் தேடுவதுபோல நமது பாவங்களை மன்னிக்கும் படிக்கும் ஆபத்துக்கள் நேரிடும்போது எமக்கு உதவி செய்யும்படியும கிறிஸ்துவைத் தேடுகிறோம். பாவத்தில இருந்து தப்புவதற்காகவும் நரகத்துக்குத் தப்பி மோட்சம் செல்லுவதற்காகவும் கடவுளை நினைப்பவர்கள் அநேகர் இருக்கிறார்கள். இவைகளுக்குப் பின்னால் இருப்பதென்ன? இப்பேர்ப்பட்ட காரியங்களுக்காக மாத்திரம் கடவுள் தமது குமாரனை உலகத்துக்கு அனுப்பவில்லை. பெரிய நோக்கத்தோடும், உறுதியான தீர்மானத்தோடும் அவரை இவ்வுலகத்துக்கு அனுப்பினார். அந்தத் தீர்மானம தான் "பரலோகத்திலிருக்கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குளளே கூட்டிச் சேர்க்கப்பட வேண்டும்" என்பதாகும்.

சகலத்தையும் ஒற்றுமைப் படுத்துபவர் கிறிஸ்துதான். கிறிஸ்துவுக்குள்ளே என்று நாங்கள் சொல்லும்போது அது அவரின் சிலுவையைக் குறிக்கிறது. சிலுவை என்றால் நாங்கள் நினைப்பதுபோல அது ஒரு மரமல்ல. அவர் அடைந்த மகா பெரிய இரகசியமாகிய மரணத்தைக் குறிக்கும் சொல்தான் சிலுவை. அவருடைய மரணத்தின் நிமித்தமாக நாங்கள் எல்லாரும் ஒற்றுமைப்பட வேண்டும். இந்த மகத்தான பெரிய இலக்கை நாம் நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும். சகலமும் ஒற்றுமைப்படுவது நாளை நடக்கும் சம்பவமல்ல. அல்லது நாம் தீர்மானிக்கும்போது நடக்கும் காரியமுமல்ல. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி" என்று பவுலப் போஸ்தலன் கூறுகிறார். ஆகவே நாங்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றித்து அழைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவித்த நம் வாழ்வின் இலக்காக வேண்டும். அதுவே கிறிஸ்து அனுப்பப்பட்ட நோக்கமுமாகும்.

— நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

19TH JULY, 1968.

## A DANGEROUS TREND

The irrepressible Minister of Education, Mr. I. M. R. A. Iriyagolle, was once again in his unreasonably aggressive mood the other day in Galle, when he addressed a conference of Principals and Head-teachers of schools in the Galle District. In the words of a report appearing in the *Daily Mirror* of the 6th inst., he "severely condemned all and sundry, including the Press, errant teachers and university dons, the politicians and the leaders of nations for the existing indiscipline and unrest in the world in general and this country in particular." It is very difficult for many people like us to understand just why the Minister is so relentlessly hard on the universities and their dons, and other teachers. If according to him they are bad, it is up to him to remedy matters, for they are directly under him. Instead of doing that, he holds them to public ridicule and condemns them loudly. We have had occasion in the recent past to censure his wild condemnation of university dons. Now he has once again resorted to similar wild allegations against them. This is what he said at the meeting referred to above: "Some parents were averse to sending their children to the varsities because the varsities in Ceylon were hopelessly bad. After a few days in the varsities several students committed suicide. Some of the varsity dons lectured like parents to the undergrads because within two years of service they knew their lectures by heart. They repeated the same old thing without doing any research on the latest methods on any subject or acquiring fresh knowledge on subjects." Is not the Minister here guilty of precisely the same fault he finds in the dons? Is he not repeating the same accusation ad nauseam without doing any research on actual facts about the dons? He would do well to engage in the necessary research before lapsing another time into his reprehensible practice.

However, we are glad to agree with him in one important matter — his criticism of certain sections of the Press which tend to corrupt society, especially the youth, by unhealthy publications. He could not be contradicted when he said: "The newspapers published long articles on Buddhist doctrine, culture and civilisation during Vesak days only and during the rest of the year foisted upon the peoples articles and pictures to corrupt the morals of even adults". He also made particular mention of a week-end publication which carried all sorts of nude pictures and sex stories to appeal to the baser instinct of man. The Principal of Kingswood College, Kandy, gave expression to the same opinion in his report at the last prize-giving: "With a high literacy rate in Ceylon it is inevitable that people read a good number of daily papers and on Poya Day. If you glance over the inner pages of some of the week-end papers, you would see that they are full of sexy articles, nude pictures and suggestive material. Some lassie who returns to the island after a short jaunt to the so-called civilised parts of the world is given full page coverage for her psychedelic idiosyncracy and to please whom? Imagine the young ones getting a dose of such questionable reading and illustrations going on the Poya Day to the Temple, Church and Mosque with a tranquil mind". There cannot be any doubt in the correctness of this analysis. We ourselves have referred in the past to such lapse of some sections of the country's Press. They seem to resort to such practices because they would increase their incomes, but little realise the irreparable damage they are causing particularly to the youth of our land. Can it be maintained that they cannot secure adequate material for filling their pages which would uplift and ennoble the minds of our youth? We appeal to our fellow-workers in the Press of the country to abandon this pernicious practice and publish articles and pictures strong enough for the edification and moral regeneration of all our people, pointedly the young people. It is a sacred duty which the Press cannot, and dare not, shirk.

## THE WAKE OF THE D. C. BILL

*( Contributed )*

Many people have felt during the past few days that the Federal Party must walk out of the Government. The Federal Party had been led to hope during the past three and a half years that the D. C. Bill would definitely be presented to Parliament; and that, though the Opposition would certainly oppose it, the Party which the F. P. had helped to put into power would without doubt support the Bill. Now, of course, it is well known that the Bill has had to be dropped, largely because the U. N. P. itself was revolting against it.

There are some who hold that there was nothing in the Bill anyway; and that its acceptance by Parliament would have conferred no substantial benefit on the Tamils. However, the significance of the D. C. Bill was not in anything that it offered as in the attitude it might have signified. There is an old saying to the effect that it is not the gift that matters but the giving, i. e. not the content of the gift as the attitude behind it. The D. C. Bill was looked upon as a gesture of the U. N. P. towards the Tamils to let them know that the Government cared for them.

The fact that the D. C. Bill is not going to be brought up, therefore, means that the U. N. P. is not willing to show the one gesture it was expected to show the Tamils. And the Tamils have every right to feel that a Party that is not willing to give them (in the words of a correspondent in this paper) even an "empty bottle" would hardly give them anything more. Therefore, the question has been agitated whether the Federal Party should not walk out of the Government.

If the Federal Party withdraws its allegiance, there is no doubt that the fall of the Government would be imminent. It may possibly survive a month or two. After that those who come forward to support the Government in its present need would think it advisable to join the Party strong enough not to need their services; and so the Government would fall. But the question is whether the S. L. F. P., if it comes to power, would be more generous to the Tamils than the U. N. P.

If then the U. N. P. has let down the Tamils and the S. L. F. P. has shown, as in the past, that it is even less worthy of trust, what should the Tamils have done three and a half years ago? Jinnah, the founder of Pakistan, has said "Majorities always persecute minorities." This is certainly not true. What is true is that majorities are always tempted to overlook the claims of minorities; and they often succumb to that temptation.

The reason for this is that any Party comes into being and exists to safeguard the interests of a certain group or community. It is natural that it should not be concerned with the interests of others. The Labour Party in England exists to safeguard the interests of labour and not those of the Conservatives. One party does not expouse the cause of other parties unless it suits its purpose. Therefore, for any group or community to depend on the spontaneous goodwill and charity of another would be extremely risky. Sir Ivor Jennings, who wanted to lay down the law not merely for the present but the future also, drew up the Constitution of Ceylon on the basis that the minorities in Ceylon should depend on the goodwill of the majority and not ask for legal safeguards. This spontaneous goodwill or charity has shown a few signs of forthcoming; and naturally so.

The Madras *Hindu* thinks that the Tamils should have "pressurised" the Government, when they were in a position to do so, instead of waiting so long. There is no doubt that the Federal Party has pleaded with Government during the last three and a half years to bring up the Bill. What happened was that, by the time the Bill was ready for presentation, the pressure on Government had waned. It was not adequate to make the Government go forward against the opposition that had gathered against it.

The initial mistake made by the Tamils was in their attitude of renunciation towards power. They had refused to accept places in the Cabinet; they had wanted the U. N. P. to wield the power, and for themselves merely wanted the privilege of enabling the U. N. P. to do so. (It was only at the last moment that they consented to let one of their men to accept a place in the Cabinet). This act of self-abnegation was expected to release the well-springs of charity on the part of the U. N. P. But the well-springs of political charity seldom gush.

It is to be hoped that the Federal Party will learn its lesson. If it wants the Government to do anything for it, it must share in the Government. It must make itself felt in the Cabinet and not merely in Parliament. Help in Parliament is readily accepted and readily forgotten. If more Federal Party members than one had been in the Cabinet, they would have seen to it that Government did not always take the turns that finally led to a blank wall.

Those, who want the Federal Party to walk out of the Government, must advise which of the two courses left open to it after that it should take; it may join the S. L. F. P. or it may not join any party whatever but remain entirely independent. To join the S. L. F. P. and support its policies would be to help actively in bringing about our extinction. To join no party whatever would be to sit by and watch while others bring it about. The one would be perverse but at least heroic; the other would be quite ridiculous. The result, however, would be the same — the extinction of the Tamil race.

If the aims of the Tamils are to be achieved in a Parliamentary manner, the wisest thing would be to preserve the Parliamentary alliance with the U. N. P. It may mean that we do not achieve our aims now, but we at least survive to achieve them some other day. It must, however, be clear to all that the alliance with the U. N. P. is Parliamentary only; it does not mean that either of the Tamil parties merges with the U. N. P. and identifies itself with all that the U. N. P. stands for.

In view of what has been said above, I trust the readers of the "Morning Star" will be grateful for its timely editorial of last week.

## BEHOLD, I MAKE ALL THINGS NEW

(A sermon preached at the Jaffna College S. C. M. Service at the Cathedral Church, Vaddukoddai, on Sunday, the 14th inst., by the Rev. S. S. Arulambalam.)

*And He who sat upon the throne said, "Behold, I make all things new."*

Rev. 21: 5.

This verse from the book of Revelation is relevant for us, for more than one reason. It is relevant because it happens to be the theme of the 4th assembly of the World Council of Churches now meeting in Uppsala, and therefore has a message for all Christians. But it is particularly relevant for the young people of our time, because it has something very important to say to them.

In the book of Revelation we read about the vision, that John the author of the book sees, and also about the voice that he hears from God. God speaking through this verse assures John of a renewal which he had promised to bring about on this earth. If we read through the Bible carefully, we would find, that this very same idea of renewal is present much earlier in the book of the Prophet Isaiah. In Isaiah Chapter 43 we read the following verse — "Behold I am doing a new thing." We may then want to know whether there is any connection between the promise that God made, during the time of Isaiah, and the one that He makes to John. The answer to this would be in the affirmative.

There is indeed a very close connection between the two verses. The verse that occurs in the book of Isaiah speaks of a renewal that God proposes to bring about, sometime in the future; and the one that we have read from the book of Revelation refers to the *very same* renewal which He has already begun in history. When God said to John that He would make all things new, He was referring to a process of renewal, which He had already set in motion. And because this process of renewal had not attained its ultimate goal, during the time of the author, God assures him of its fulfillment in time to come.

God saw that the beautiful world which He had created had become an awful place, as a result of man's disobedience and rebellion against Him. And so He sent His only Son to this world, in order to recreate the whole created order. The arrival of Jesus to this world was thus a fulfillment of a promise which God had made to Isaiah.

To put it in Pauline language, Jesus, the second Adam, became the father of a new creation, that God intended to bring about in the future. This man Jesus, unlike the first Adam, made peace with God on man's behalf. He was thus able to re-direct the whole course of human activity to attain its destined goal. He made man see God in a different light from what he was used to all along. Man under the curse of sin looked upon his creator as an unapproachable and cruel tyrant. But Jesus revolutionized this very concept of God. He helped us to see God as a loving father, rather than as a hard task-master. Thus Jesus set in motion a process of recreation that God hadpromised to Isaiah.

Every person who came in contact with Jesus returned as a different person after the encounter, and every issue that He dealt with received a new interpretation from Him, and thus everything on earth became transformed by the power of His love. Rebirth, Renewal and Recreation were the words that characterised the ministry of Jesus on earth. This process of renewal which God had initiated in Jesus, He hoped to complete with man's assistance. It is, therefore, to this consummation of a long process of renewal that God refers, when He says "I will make all things new."

This work of renewal, as we shall see later, was not confined to the ministry of Jesus alone. Though it originated during the time of Jesus, yet it did not cease after His departure, but continued for ever, through the work of His faithful followers. The power of this new force, to transform everything was evident not only to the Christians, but even to their pagan neighbours. It was, therefore, no surprise to find even the pagan Roman Empire being transformed by a small community of committed Christians. We, therefore, find that the promise to make all things new, was a promise not merely to a *particular* group of people, living at a particular time, but to *all men* throughout the ages. Once the process of renewal had begun, it was assured of its continuance, provided man was willing to co-operate with God to attain its end.

But before man makes any attempt at joining hands with God, he should be on his guard, not to identify this work of renewal with any and every movement for change in society. To do so would be to make the great mistake of identifying religion with culture. The Church in Germany, which made this identification under Hitler's regime, realised its mistake later on. We should also be aware of the fact that change does not necessarily mean a complete break with the past. Very often men have thought, that the best way to bring about a change would be to overthrow everything that tradition stands for.

The young people, who took part in the recent student rebellion in France, thought that they could put the French society in order, by throwing overboard the very basis of stable government. In other words, the change that they advocated was a drastic change which would involve a complete break with French tradition. But the renewal that we as Christians are expected to bring about should not be anything like the French Rebellion. The transformation that we are asked to make is one which pays all regard to law and order. Jesus, though a great reformer, yet had a great deal of respect for law and order. The renewal that God ushered in through Jesus was one that was based upon the Jewish tradition. Jesus's reformation was, therefore, within the framework of Jewish law and tradition. It is because of this respect for tradition, that Jesus says that He *came not to destroy but to fulfil the law.*

In other words, Jesus was never for violence as a means of change. He always thought of His reformation in terms of love, rather than in terms of violence. And, therefore, the change that He hoped to bring about, was a slow and a gradual process.

The renewal that God expects to bring about is not one which caters to man's whims and fancies, but one which fulfills His purpose for us. Therefore, any credit for the good that we find in human society should go to God, instead of to men. God's promise of renewal is one that is entirely from above. Man is only used as an instrument to realise this end on earth. Therefore, if we are anxious to see this renewal taking place in our midst, we should realise that we must be also prepared, to be fully open to the guidance of the Holy Spirit. Like the Prophets of old we must wait upon God's guidance, and allow him to bring whatever change He desires to bring about.

The call from God to join hands with Him, in this work of renewal, seems to me to be more to the young people of our time, than to anyone else. It is not because the others are incapable of doing it, but because of the fact that the youth see things more clearly and differently than their elders. The elders are sometimes not quite aware of certain evils, that exist in society, because they have lived with them for many years.

But the young people of our time are more sensitive to the evil in society than their predecessors, and are, therefore, beginning to question the society which has tolerated them so far. In spite of all the criticism that has been levelled against the Hippie Movement, the great historian of our time, *Arnold Toynbee*, has a good word to say about the Hippies. He says that these young people are more conscious of the evil in society than any other group in America. He, therefore, describes them as "A red warning light, for the American way of life". Because the youth of our time are sensitive to the evil in society, we can also expect them to work towards the eradication of them.

And it will not be very wrong to say that the prophecy of Joel that our young men will see visions has come to pass to a very large extent today. God has really shown to many a youth the vision of a better and happier world. And it was part of this vision that Dr. Martin Luther King saw, and which he later expressed in his famous speech from Lincoln Memorial about his dream for a better world. Yes, God can make all things new for us today, if only we are prepared to join hands with Him, and work towards that goal. And He who sat upon the throne said "Behold, I make all things new". *Amen.*

## FROM MY LONDON NOTEBOOK

R. D. KARUNAIRAJAN

### Ailing Currency

The next two months are believed to be the most crucial period for the sterling. There are 30 sterling area countries and Britain would try its best to avoid any particular area changing its reserves from sterling to other currencies.

Recently at a conference of representatives from the world's top Central Banks in Switzerland, a standby support to the tune of £833 million was given to the pound to last over a period of ten years. This comes up for ratification in September.

The confidence in the pound could be easily undermined by any of the sterling area countries, should there be some rocking of the boat during the next 2 months. The 12 contributing countries will no doubt re-consider this support, in the event of a weakening, to the pound.

### Sterling and Nigeria

The Federal State of Nigeria has £300 million worth of investments in Britain. The position of sterling is in such predicament, the British Government may not risk reprisals from the Nigerian Government by taking a humane, fair and just stand on the Nigerian-Biafran war.

Czechoslovakia, Belgium and Holland have stopped supplying arms to Nigeria. But Britain continues to supply arms. The British Government is evidently too concerned about possible take-over of all British interests in Nigeria, especially Shell-BP and Unilever. The chances of Britain flying food into beleagured Biafra are nil, as Major Gowan has clearly stated that any aircraft carrying foodstuffs or medical supplies to Biafra would be shot down.

A few days ago an aircraft chartered by the World Council of Churches successfully landed urgent supplies in Biafra.

### Britain and Arms Control

A recent issue of *Punch* says, 'We have a reasonably sensible control of firearms at home, but we have no difficulty in finding excuses to provide other countries with the weapons needed to prosecute civil war and separatist violence'.

When I was a fledgeling, the first vivid impression that was given to me about Britain was that the British were the shopkeepers of the world. Financially Britain is in a sickening mess now. Running arms to areas of civil conflict, therefore, is both opportune and 'good business'. There is present in Britain a strong armaments lobby. Their vested interests, no doubt, lie in violent death. The Labour Government has been under very severe criticism for accepting the United Nations ruling a ban on supply of arms to apartheid South Africa. There is, however, no doubt that the armaments lobby will continue to pressurise and nag the powers — that — be, till they get the Government's ban reverted.

### Back Britain

'Back Britain', 'I'm Backing Britain', 'Buy British', and 'Buy Home Products' labels are seen all over London and in the country as a whole. This new upsurge in patriotism to inject strength into the weakening pound is even expressed by the cheap use of the Union Jack in all forms and manners. Carrier bags, dresses, shoes and ribbons and countless number of other items display the National Flag. I have even seen cars painted with the Union Jack. Every other thing seen on the highways and by-ways is a flag-draped affair. Recently I went round a large and famous Departmental Stores in London where there was a liberal display of 'Buy British' stickers. But inside the shop, they appeared to stock more imported goods than British made products. Most of these items were luxury and super luxury goods. One of them was a child's fancy roundabout made of paper board and twine costing 27 shillings. Scrabbles costs less. This roundabout could be made by a child within an hour with 6 penny worth of material. When I expressed revolting shock at the price, the

( continued on previous column )

( continued )

maxi-mini-skirted assistant told me that it was imported. I wonder how many Biafran lives were lost by the bullets sold to Nigeria to buy this idiotic toy. The assistant was not at all pleased when I made this comment.

A few weeks ago, in a University toilet, I saw scribbled on the wall, 'Man, we are *Blacking Britain*'.

Printed and published for the American Ceylon Mission by Mr. Abraham Saravanamuthu Thambiratnam, residing at Manipay, at the American Ceylon Mission Press, Uduvil Road, Manipay, on Friday, 19th July, 1968.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org